**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கடலாடி.**
**முன்னிலை : திரு.S.சாதுசிவசுப்பிரமணியன் B.A.,B.L.**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**நீதித்துறை நடுவர், கடலாடி.**
**2025 ம் ஆண்டு அக்டோபர் திங்கள் 08 ம் நாள் புதன்கிழமை**

**இடைக்கால மனு எண்.01/2025**
**in**
**அசல் வழக்கு எண்.34/2024**

1. சந்திரன்
2. அருண் சங்கர் ...மனுதாரர்கள்/வாதிகள்

/எதிர்/

1.உதயசூரியன்
2. ராஜகுரு
3. சேர்மராஜ்
4. சரவணன்
5. கண்ணன்
6. நாகஜோதி
7. சங்கீதா
8. ஆறுமுகம் நாடார்
9. குணசேகரன்
10. செல்லம்
11. ராமமூர்த்தி
12. சங்கிலி பாண்டி
13. தனலட்சுமி ... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

**கேள்வி**:

1. இம்மனுவில் மனுதாரர்கள்/வாதிகள் கோரியவாறு தாவா சொத்தில் கள ஆய்வு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டுமா?

2. இம்மனுவானது மனுதாரர்கள்/வாதிகள் தரப்பு மனு சொத்தினை தல ஆய்வு செய்து தாலுகா சர்வேயர் உதவியுடன் வருவாய் ஆவணங்கள் அடிப்படையில் அளவீடு செய்து அறிக்கை மற்றும் வரைபடம் தாக்கல் செய்ய நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்ய வேண்டி கட்டளை 26 விதி 9

சி.பி.சி.ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாவா சொத்துக்களை அளவீடு செய்வதற்கு எந்தவொரு ஆட்சேபனையும் இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது.

## உத்தரவு

**4.** ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன. முடிவாக, மனு அனுமதிக்கப்பட்டு, வழக்கறிஞர் **திரு.P.தர்மராஜ், (M.S.No.3147/2021)** என்பவர் இவ்வழக்கின் தாவா சொத்தை அளந்து அறிக்கையாக தாக்கல் செய்ய ஆணையராக நியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது. வழக்கறிஞர்/ஆணையர் தபசில் சொத்தை சர்வேயர் மற்றும் கிராம நிர்வாக அலுவலர் உதவியுடன் இயற்கை தன்மைகளை அளந்து வரைபடத்துடன் அறிக்கை தாக்கல் செய்ய உத்தரவிடப்படுகிறது. இரு தரப்பினரும் தாவா சொத்தை அளப்பதற்கு வழக்கறிஞர்/ஆணையருக்கு உதவி புரிந்திட வேண்டுமென்றும், வழக்கறிஞர்/ஆணையர் இந்நீதிமன்றத்தில் ஆணையர் அறிக்கையை வரும் **07.11.2025** ம் தேதிக்குள் தாக்கல் செய்ய வேண்டுமென்றும், வழக்கறிஞர் ஆணையர் ஊதியமாக ரூ.5,000/- நிர்ணயிக்கப்பட்டு மேற்படி தொகையை ஆணையர் அறிக்கை தாக்கல் செய்யும்போது ஆணையருக்கு நேரடியாக அளிக்க வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது. **அழைக்க 07.11.2025**

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் சரிபார்க்கப்பட்டு 08.10.2025 இன்று அவையறிய பகரப்பட்டது.

SADHU SIVA SUBRAMANIAN

Digitally signed by SADHU SIVA SUBRAMANIAN
Location: District Munisif cum Judicial Magistrate, Kadaladi.
Date: 2025.10.08 15:54:17 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர்,
கடலாடி.